பாளையங்கோட்டையில் இருப்பதை வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் இந்த ஆண்டு மாற்றித் தர முன்வருவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூரில் இப்போது சார்பு நீதிமன்றம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அங்கு 4 நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஒன்று, சார்பு நீதிமன்றம், மற்றொன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நான்காவது, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவை இருக்கின்றன. தற்போது நீங்கள் கூடுதலாக Additional Sessions Court கேட்கின்றீர்கள். Sub-Court-ஐ தரம் உயர்த்தித் தர வேண்டும் அல்லது பாளையங்கோட்டையில் செயல்படுவதை வள்ளியூருக்கு மாற்றித் தாருங்கள் என்று கேட்டிருக்கிறீர்கள். தங்களுடைய கோரிக்கை, ஏற்கெனவே நீங்கள் மனுவாகத் தந்து, அது உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த மனுவின்மீது மாண்புமிகு தலைவர் தளபதியினுடைய அரசு, நிச்சயமாக விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி.

வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

42—

மணிமண்டபம்

***75751—திரு. மு. பாபு:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, நல்லூர் கிராமத்தில் புலவர் நல்லூர் நத்தத்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 மார்ச் 27]

செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, நல்லூர் நத்தத்தனார் அவர்களுக்கு நல்லூர் கிராமத்தில் மணிமண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு செம்மொழி மாநாடு நடத்திய அரசு; தமிழறிஞர்களைப் பெருமைப்படுத்திய அரசு. அப்படிப்பட்ட நம்முடைய அரசு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள்.

திரு. மு. பாபு: சங்ககால புலவர் நத்தத்தனார் அவர்களுக்கு நல்லூர் கிராமத்திலே மணிமண்டபம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று 'உலக அரங்கம் தினம்-World Theatre Day' என்கிற முறையில் துறையின் சார்பில் அனைவருக்கும் வாழ்த்துகளை இந்த நேரத்திலே உரித்தாக்கிக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு இதுபோன்ற கவிஞர்களுக்கும், புகழ்சால் தலைவர்களுக்கும் மணிமண்டபம் அமைப்பது என்பது நிறுத்தி வைக்கப்பட்டு, இப்போது பெரும்பாலும் அரங்கம் என்கிற வகையிலே, அது அரசு நிகழ்ச்சி நடத்துகின்ற வகையிலும், பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டு, அந்த இலக்குடன், அப்படிப்பட்ட கொள்கை முடிவுடன் அரசு இதைச் செய்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 10–10

நல்லூர், புதுவைக்கு அருகிலுள்ள கடப்பாக்கம் துறைமுகத்தை ஒட்டியுள்ளது. ஊருக்கும், கடலுக்கும் இடையே அகண்டதொரு

உப்பங்கழி உள்ளது. இந்த உப்பங்கழியை இன்றும் காணலாம். அந்த இடைக்கழியைக் கருத்திற்கொண்டு, அப்பகுதி இடைக்கழிநாடு என்று முன்பு அழைக்கப்பட்டிருக்கிறது. முற்காலம் முதல் இன்றுவரை இடைக்கழிநாடு என்றே வழங்கப்படுகிறது. அங்குள்ள சிற்றூர் ஆகிய நல்லூரில் பிறந்து, வாழ்ந்தவர்தான் புலவர் நத்தத்தனார். இதனால் இவர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் என்றே அழைக்கப்பட்டார். இவருக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையில் ஓர் அழகிய நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. புலவர்தம் பாடல்களில் மூவேந்தர்களைப் போற்றியுள்ளதைக் குறிப்பிடும்வகையில், வில், அம்பு, புலி மற்றும் மீன் கொடி சின்னங்கள் பொருத்தப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டு இந்த நினைவுச் சின்னம் முனைவர் அவ்வை நடராஜனார் தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 29 ஆம் தேதியை தமிழக அரசு தமிழ் கவிஞர் நாளாக ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடி வருகிறது. இந்நாளையொட்டி, ஒவ்வோர் ஆண்டும் மதுராந்தகம் வட்டம், இடைக்கழிநாட்டிலுள்ள நல்லூர் நத்தத்தனார் நினைவுத் தூணுக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.*

திரு. மு. பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிப் போராளி, இம்மானுவேல் சேகரன் அவர்களுக்கு பரமக்குடியிலே மணிமண்டபம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகள் எண்ணற்ற அளவில் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, நிதிநிலைமைக்கேற்ப, தொடர்ந்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிய அறிஞர், இந்திய விடுதலைக்காக 9 ஆண்டுகள்*

2023 மார்ச் 27]

சிறைக்குச் சென்ற சுதந்திரப் போராட்ட வீரர், திரு. ஜமதக்னி அவர்களுக்கு, அவர் பிறந்த ஊரான கடப்பேரியில் நினைவுத் தூண் அமைக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அவர் பகுத்தறிவுச் சுடர் சிங்கார வேலரின் சீடராக இருந்தவர். சிறைச்சாலையில் பெருந்தலைவர் காமராஜர், நல்லக்கண்ணு அய்யா, சங்கரய்யா அவர்களுக்கு மார்க்சிய கலந்தாய்வு வகுப்பு எடுத்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கே.ஆர். ஜமதக்னி அவர்களின் மூலதனம்–மிகை மதிப்புக் கோட்பாடுகள் புத்தகத்தின் மொழியாக்கத்திற்காக, 1997 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 5 இலட்சம் ரூபாய் அறிவித்துள்ளார். அந்தச் சிறப்பின்பால், அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பணிகள் துறையின் சார்பில் செய்யப்பட்டு வருகின்றன. இது நியாயமான கோரிக்கை. ஏற்கெனவே, நான் தெரிவித்ததைப்போல, நிதி நிலைமைக்கேற்ப, எதிர்காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத்தொடரிலே கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க நிதியொதுக்கி, அப்பணி தற்போது முடியும் தருவாயில் உள்ளது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து விசாரித்து, அந்த இடம் இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடமாக இருப்பதால், அந்த இடத்தை குத்தகைக்கு எடுத்து, கட்டுமானப் பணி மீண்டும் தொடங்கப்படும் என்று கூறியிருந்தீர்கள். எனவே, தாங்கள் மீண்டும் நேரடியாக வந்து அப்பணிகளை தொடங்கி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் பணிகள் குறித்து ஆய்வு செய்தபோது, அப்பிரச்சினை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கடந்த கூட்டத்தொடரிலேயே சட்டமன்றத்தில் இதுகுறித்து எடுத்துச்சொன்னார். தேர்தலுக்கு முன்பாகவே, அப்பணிகள் நடைபெறாமல் இருந்தன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு நானும், துறையின் செயலாளர் மற்றும் துறையின் இயக்குநருடன் தொடர்புகொண்டு பேசினேன். அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் குறித்த பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் இப்போது ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணி நிச்சயமாக துவங்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

கால்நடை மருத்துவக் கல்லூரி

***75580—திரு. பி. அய்யப்பன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி பகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*